**O.S.126/2020**

Date : 06.11.2024

வா.சா.1 : சந்திரகுமாரி

வா.சா. 1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

வழக்கு தாக்கல் செய்ய நான்தான் வழக்கறிஞருக்கு விவரம் கூறினேன். எங்களது சொத்தில் உள்ள மரத்தை பிரதிவாதி வெட்டியதால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சொத்து இலங்குளம் கிராமத்தில் உள்ளது. சர்வே எண்.168/8 ஆகும். சொத்தின் எல்கை விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வடக்கு பக்கம் எனது அப்பாவின் சொத்து உள்ளது. தெற்கு பக்கம் என் அப்பாவின் சொத்து உள்ளது. கிழக்கு மற்றும் மேற்கு பக்கமும் என் அப்பா சொத்துதான் உள்ளது. என் தாத்தாவிற்கு நான்கு மனைவிகள் உள்ளனர். என் அப்பா மூன்றாவது மனைவியின் வாரிசு ஆவார். என் அப்பாவிற்கு ஒரு தம்பியும், ஒரு தங்கையும் உள்ளனர். முதல் மனைவிக்கு ஒரு பெண் மட்டும் வாரிசு ஆவார். இரண்டாவது மனைவிக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியவில்லை. நான்காவது மனைவிக்கு ஒரு மகனும் இரண்டு மகளும் உள்ளனர். எனது பிராதில் எனது அப்பாவிற்கு கிருஷ்ணம்மாள், லெட்சுமி என்று இரண்டு சகோதரிகள் உள்ளனர் என்று நான் சொல்லியுள்ளதில் லெட்சுமி என்பவர் மூத்த தாரத்தின் மகள் ஆவார். லெட்சுமி என் அப்பாவுடன் பிறந்தவர் ஆவார். என் அப்பாவின் தம்பி பெயர் பழனி ஆவார். பிராதில் பழனி என்ற ஒரு சகோதரர் இருக்கிறார் என்று சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராதில் என் தாத்தாவிற்கு நான்கு மனைவிகள் என்று நான் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கட்சி படி வழக்கு சொத்து என் தாத்தா சொத்து என்று நான் சொல்கிறேன் என்றால் என் தாத்தாவிடம் இருந்து என் அப்பாவிற்கு வந்து தற்போது எனக்கு எழுதி கொடுத்துவிட்டார்கள். இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கேட்டு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் உரிய தரப்பினர்களை கட்சி சேர்க்காததால் வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு எப்படி வழக்கு சொத்து கிடைத்தது என்றால் என் அப்பா மூத்த பையன் என்பதால் கிடைத்தது. எத்தனை செண்டுக்கு இந்தவழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2 1/2 ஏக்கருக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 ஏக்கர் 48 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு 1 ஏக்கர் 48 செண்டு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா-ஆ.2 ஆவணம் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். 1 ஏக்கர் 48 செண்டுக்கு என் தாத்தா பெயரில் தனிப்பட்ட முறையில் ஆவணங்கள் உள்ளதா என்றால் மொத்தமாக உள்ளது. மொத்தமாக என்று நான் சொல்வதில் என்ன ஆவணம் உள்ளது என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் மொத்தம் 9 நபர்கள் உள்ளனர் என்றால் சரிதான். அது கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். என் அப்பா 27.10.2011 ம் தேதி என் பெயருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி தர என் அப்பாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் கூட்டுப்பட்டாப்படி பாத்தியப்பட்டது என்றுதான் என் அப்பா சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கில் என்ன பதில் போட்டுள்ளார் என்று தெரிந்துகொண்டேன். தபசில் சொத்து புல எண்.168/8 ல் 2 ஏக்கர் 63 செண்டு என்றால் சரிதான் மற்றும் 168/9, 168/10 ல் பிரிவின்றி 1/18 பாகம் சுடலை முத்து கோனார் மகன் பெரியசாமி கோனாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல சுடலை முத்து கோனார் மகன் மாடசாமிக்கு பாத்தியப்பட்டதாகும். 1981 ம் ஆண்டு என் தாத்தா சுடலை முத்து கோனாரும் பெரியசாமி என்பவரும் பரிவர்த்தனை ஆவணம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 28.09.1981 ம் ஆண்டு என் தாத்தா சுடலை முத்துவும் பெரியசாமியும் ஒரு பரிவர்த்தனை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டனர் என்றும் அதன் படி 1/18 பாகமான 14 1/2 செண்டு மட்டுமே எங்களுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. ராமன் குடுமன் மகன் சுடலை முத்து என்பது என் தாத்தா என்றால் சரிதான். 2011 ல் என் அப்பா எழுதிய செட்டில்மெண்ட்மோசடியானது என்று என் அப்பா மீது பிரதிவாதி விஜயநாராயணம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் குற்ற எண்.132/2013 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றும் அந்த வழக்கில் இருந்து என் அப்பாவை காப்பாற்றுவதற்காகவே இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிராதில் தற்போதைய சப்டிவிசன் படி 168/8A, 168/8B உள்ளது என் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். நான் நர்சிங் படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பட்டாவில் சர்வே எண்.168/8B பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் அது போலியாகும். மேற்படி பட்டா போலியானது என்று

நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பட்டா உண்மையான பட்டா என்றும் அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.168/8A மற்றும் 168/8B யில் 2 ஏக்கர் 56 1/4 உள்ளது என்றால் சரியல்ல. பிராதில் என் தந்தை சுடலை முத்து மற்றும் பார்வதி என்பவருக்கும் வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாத்தா என் அப்பா பெயருக்கு பின்பு எழுதியுள்ளார். என் தாத்தாவிற்கும் பார்வதி என்பவருக்கும் எந்த வாய்மொழி பாகமும் ஏற்படவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தா என் அப்பாவிற்கு பத்திரம் எழுதிகொடுத்துள்ளார். அந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய தயாராக உள்ளேன். பிரதிவாதியின் தாயார் பார்வதிக்கு 1975 ம் ஆண்டு ஏற்பட்ட பதிவு பெற்ற கிரைய ஆவணத்தில் படி 1 ஏக்கர் 2 1/4 செண்டு பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 2010 ல் ஏற்பட்ட கிரையம் படி 1 ஏக்கர் 20 செண்டு பாத்தியம் என்றால் சரியல்ல. 2012 ல் ஏற்பட்ட கிரையத்தின் படி 29 செண்டு பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. மொத்தம் 2 ஏக்கர் 56 1/4 செண்டு பிரதிவாதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. பிரதிவாதி தனிப்பட்டா பெற்று வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பட்டா தவறு என்று வருவாய் துறை ஆவணத்தில் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் அவ்வாறு ஒரு மனு கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தில் எங்கள் குடும்பத்திற்கு 14 1/2 செண்டு மட்டுமே பாத்தியம் என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு 1 ஏக்கர்48 செண்டிற்கு ஆவணம் இல்லை என்றால் இருக்கிறது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வழக்கில் கிரைய பத்திரம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் என் பெயரில் உள்ளது தாக்கல் செய்துள்ளேன். வா.சா-ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது என்பதால் தான் என் பெயருக்கு தனிப்பட்டா ஏதும் மாறவில்லை என்றால் சரியல்ல. என் அப்பாவை காப்பாற்றவே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் என் குடும்ப விவரத்தை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிராதில் கூறியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதியின் மீது காவல் துறையில் புகார் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளதில் அதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதி மன்ற முத்திரை கட்டணம் தவறு என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.